RESEARCH ARTICLE

INDIAN JOURNAL OF TAMIL

Asian Research Association

DOI: 10.54392/ijot2641

Migration and Transformations in Ways of Life in Sundarapandian's Novels

K. Kowsalyadevi [a, *], M. Prakash [a]

[a] Department of Tamil, Vels Institute of Science Technology & Advanced Studies, Pallavaram, Chennai-600117, India
*Corresponding author Email: deviggr@gmail.com
DOI: https://doi.org/10.54392/ijot2641
Received: 11-05-2026; Revised: 09-09-2026; Accepted: 16-09-2026; Published: 24-09-2026

Abstract: Human life is intrinsically connected with geographical space, historical time, and social relationships. The places in which individuals are born and raised, their family environments, educational institutions, and workplaces significantly influence their life experiences, perspectives, and identities. In this context, migration is not merely a geographical movement from one location to another but a complex process involving social, cultural, economic, and psychological transformations. Sundarapandian's novels Aararo, Porunai, Koovam, and Kaveri portray these transformations through the life journey of the protagonist, Arumugam. This study examines the representation of migration and changing ways of life in Sundarapandian's novels, focusing on Arumugam's transition from rural life to urban spaces through education and employment. His movement from his native village to the city for higher education and subsequently to Bengaluru for employment provides the narrative framework for exploring changing social relationships and individual identity. Particular attention is given to themes such as individual development, caste-based inequalities, linguistic consciousness, educational opportunities, urbanization, political developments, and cultural identity. The study analyses how geographical mobility influences the protagonist's social experiences, aspirations, relationships, and understanding of his cultural background. The study argues that Sundarapandian's novels portray migration as a multidimensional process that reshapes individual identity and transforms established social and cultural relationships. The protagonist's journey reveals the tensions between rural traditions and urban modernity, as well as the challenges of negotiating caste, language, education, employment, and cultural belonging. Thus, these novels provide significant literary insights into the relationship between migration, social mobility, cultural identity, and changing patterns of human life in contemporary Tamil society.

Keywords: Sundarapandian novels, Social Relationships, Education, Identity

சுந்தரபாண்டியன் நாவல்களில் இடப்பெயர்வும் வாழ்வியல் மாற்றங்களும்

க. கௌசல்யா தேவி [அ *], ம. பிரகாஷ் [அ]

[அ] தமிழ்த்துறை, வேல்ஸ் அறிவியல் தொழில்நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனம், பல்லாவரம், சென்னை - 600 117, இந்தியா

முன்னுரை

இலக்கியம் என்பது தனிமனித வாழ்க்கையை மட்டும் எடுத்துரைக்கும் கலைவடிவமன்று; அது ஒரு காலகட்டத்தின் சமூக, பொருளாதார, அரசியல் மற்றும் பண்பாட்டுச் சூழல்களையும் பதிவு செய்யும் வரலாற்று ஆவணமாகவும் திகழ்கிறது. குறிப்பாக நாவல் இலக்கியம், மனித வாழ்க்கையின் பல்வேறு நிலைகளையும் அவற்றில் நிகழும் மாற்றங்களையும் விரிவாகச் சித்தரிக்கும் தன்மையுடையது. ஒரு மனிதன் வாழும் இடம் அவனுடைய வாழ்க்கை முறையையும் சிந்தனையையும் சமூக உறவுகளையும் பாதிக்கிறது. எனவே, இடம் என்பது கதையின் நிகழ்வுகளுக்கான பின்னணி மட்டுமல்ல; அது மனித வாழ்வை உருவாக்கும் அடிப்படைக் காரணியாகவும் அமைகிறது.

சுந்தரபாண்டியனின் நாவல்களில் இத்தகைய இடவியல் பார்வை குறிப்பிடத்தக்க வகையில் இடம்பெறுகிறது. குறிப்பாக ஆராரோ நாவலில் கிராமப்புற வாழ்க்கையும் குழந்தைப் பருவ

அனுபவங்களும் விரிவாகப் பதிவாகின்றன. பொருநை நாவலில் கல்வி, இளமை, மொழியுணர்வு மற்றும் பிராந்தியப் பண்பாட்டு அடையாளம் முன்னிலைப்படுத்தப்படுகின்றன. கூவம் நாவலில் சென்னை நகரத்தின் வரலாறு, நகரமயமாக்கம், கல்வி மற்றும் அரசியல் விழிப்புணர்வு ஆகியவை சித்தரிக்கப்படுகின்றன. காவேரி நாவலில் வேலைவாய்ப்பின் காரணமாக நிகழும் இடப்பெயர்வும் அதனால் உருவாகும் சமூக, அரசியல் மற்றும் உளவியல் நெருக்கடிகளும் பேசப்படுகின்றன.

இந்நாவல்களைத் தனித்தனியான கதைகளாக அணுகுவதைவிட, ஆறுமுகம் என்னும் கதைமாந்தரின் வாழ்க்கைப் பயணத்தின் தொடர்ச்சியான நிலைகளாக அணுகும்போது, அவற்றுக்கிடையிலான உள்ளார்ந்த தொடர்பு தெளிவாகிறது. கிராமம், கல்வி நிலையம், பெருநகரம், வேலைவாய்ப்புச் சூழல் என விரியும் இப்பயணம், தனிமனித வளர்ச்சியையும் சமூக மாற்றத்தையும் ஒருங்கிணைத்துக் காட்டுகிறது.

கிராமப்புற வாழ்வியலும் சமூக அடுக்குகளும்

சுந்தரபாண்டியனின் ஆராரோ நாவல் கிராமப்புற வாழ்வியலை அதன் இயல்பான மொழி, பழக்கவழக்கங்கள், குடும்ப உறவுகள், விளையாட்டுகள், சாதிய அமைப்பு ஆகியவற்றுடன் பதிவு செய்கிறது. இந்நாவலில் இடம்பெறும் கிராமம் வெறும் புவியியல் அமைப்பாக மட்டும் அமையவில்லை. அது குடும்ப உறவுகள், சமூக அதிகாரம், பொருளாதார நிலை, பண்பாட்டு நடைமுறைகள் ஆகியவற்றின் தொகுப்பாக விளங்குகிறது.

ஆறுமுகம் வாழும் ஊரின் அளவையும் அமைப்பையும் ஆசிரியர் பின்வருமாறு குறிப்பிடுகிறார்:

> “அந்த ஊரு ஒண்ணும் அவ்வளவு பெரிசின்னு சொல்ல முடியாது. ஆனா பக்கத்துல உள்ள சித்தரெங்கபுரம், கணக்கர்குளம், மருத குளம் பாப்பாரபுரம், வேப்பிலாபுரம் எல்லாத்தோடேயும் சேத்துப் பாத்தா சிறிசும் இல்ல. என்னா நூறு நூத்திப்பத்து வீடுக இருக்கும்” (Sundarapandian, 1992).

இந்த மேற்கோள் கிராமத்தின் அளவையும் அதனைச் சுற்றியுள்ள பிற குடியிருப்புகளுடனான தொடர்பையும் வெளிப்படுத்துகிறது. கிராமத்தின் தனித்துவம் அதன் பரப்பளவில் மட்டுமல்லாமல், அங்கு வாழும் மக்களின் உறவுமுறை மற்றும் சமூக அமைப்பிலும் காணப்படுகிறது. இத்தகைய பதிவுகள் கிராமத்தின் வாழ்வியலை வாசகரின் கண்முன் காட்சிப்படுத்துகின்றன.

குடும்ப வாழ்க்கையில் தந்தையின் அதிகாரமும் குழந்தைகளின் அச்ச உணர்வும் நாவலில் நுட்பமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன.

> “அப்பா சாப்பிட வரும்போதெல்லாம் எல்லாரும் ஒளிஞ்சிக்கிடுவாங்க. அவ்வளவு பயம்” (Sundarapandian, 1992).

என்ற வரிகள் குடும்பத்திற்குள் நிலவும் அதிகார உறவையும் குழந்தைகளின் உளவியல் நிலையையும் உணர்த்துகின்றன. இதன் மூலம் குடும்பம் என்பது அன்பு மற்றும் பாதுகாப்பின் இடமாக மட்டுமல்லாமல், அதிகாரமும் கட்டுப்பாடும் செயல்படும் சமூக அமைப்பாகவும் விளங்குவதை அறிய முடிகிறது.

கிராமத்தின் சாதிய அமைப்பும் அதிகாரப் படிநிலைகளும் நாவலில் வெளிப்படையாகப் பதிவாகின்றன. நாயக்கர் வீட்டின் அமைப்பையும் அந்த வீட்டைச் சுற்றியுள்ள அச்சத்தையும் ஆசிரியர் பின்வருமாறு சித்தரிக்கிறார்:

> “நாயக்கர் வீடு ஊருக்குக் கிழக்க தனியா பெரிய கோட்ட மாதிரி இருக்கும். ஊர்க்காரங்க யாரும் அவர் வீட்டுப் பக்கம் அதிகமா போக மாட்டாங்க. அவ்வளவு பயம்” (Sundarapandian, 1992)

மேலும், பேருந்து நிறுத்தத்தைப் பயன்படுத்துவதில்கூட சாதிய வேறுபாடு எவ்வாறு செயல்படுகிறது என்பதை நாவல் வெளிப்படுத்துகிறது. ஒரே ஊரில் வாழும் மக்கள் பொதுவான இடத்தைக்கூட சமமாகப் பயன்படுத்த முடியாத நிலை காணப்படுகிறது. இதன் வழியாக இடம் என்பது அனைவருக்கும் சமமானதாக இருப்பதில்லை; சமூக அதிகாரத்தின் அடிப்படையில் இடத்தின் பயன்பாடும் மாறுபடுகிறது என்பதை ஆசிரியர் உணர்த்துகிறார்.

அதேவேளையில், குழந்தைகளின் விளையாட்டுகள் கிராமப்புறப் பண்பாட்டின் இயல்பான வெளிப்பாடுகளாக அமைகின்றன. கண்ணாமூச்சி, கள்ளனும் போலீசும், மரக்குரங்கு, குச்சி விளையாட்டு, கோலிக்கா போன்ற விளையாட்டுகள் ஆறுமுகத்தின் குழந்தைப் பருவ உலகை உயிர்ப்புடன் எடுத்துரைக்கின்றன. இவ்விளையாட்டுகள் பொழுதுபோக்காக மட்டுமல்லாமல், குழந்தைகளின் சமூக உறவுகளையும் குழு உணர்வையும் வெளிப்படுத்துகின்றன.

> “ஆறுமுகத்துக்குப் புடிச்ச வெளையாட்டுக் கண்ணபொத்தி ஒளிச்சி வெளையாடுறது. கள்ளனும் போலீசும். இவன்தான் கள்ளன். ஓடி எங்க எங்கயோ ஒளிச்சிக்கிடுவான்” (Sundarapandian, 1992)

இவ்வாறு கிராமத்தின் தெருக்கள், மரங்கள், வீடுகள், கோயில்கள், விளையாட்டு இடங்கள் ஆகியவை குழந்தையின் நினைவுலகில் ஆழமாகப் பதிகின்றன. எனவே, கிராமம் என்பது வாழ்விடமாக மட்டுமல்லாமல், தனிமனித அடையாளம் உருவாகும் நினைவிடமாகவும் அமைகிறது.

கல்வியும் சமூக முன்னேற்றமும்

கிராமத்திலிருந்து நகரத்தை நோக்கி நிகழும் ஆறுமுகத்தின் பயணத்தில் கல்வி முக்கியமான திருப்புமுனையாக அமைகிறது. கிராமப்புறச் சூழலில் வளர்ந்த அவனுக்கு உயர்கல்வி என்பது தனிப்பட்ட முன்னேற்றத்திற்கான வாய்ப்பாக மட்டுமல்லாமல், சமூக எல்லைகளைக் கடப்பதற்கான வழியாகவும் அமைகிறது.

ஆறுமுகத்தின் கல்வி முன்னேற்றத்தைப் பற்றிக் குறிப்பிடும்போது, தந்தையின் விருப்பம் முக்கியத்துவம் பெறுகிறது. தன்னைப்போலத் தன் மகனும் உடல் உழைப்பைச் சார்ந்த வாழ்க்கையைத் தொடராமல், கல்வியின் மூலம் அலுவலகப் பணியில் அமர வேண்டும் என்பது தந்தையின் கனவாக இருக்கிறது. இதனை நாவலில் இடம்பெறும் பின்வரும் பதிவு விளக்குகிறது:

> “தன்னைப்போல தன்பிள்ளையும் மழையிலும் நின்று உடல் உழைப்புச் செய்யாமல் நிழலில் அமர்ந்து உத்தியோகம் செய்ய வேண்டுமென்ற தந்தையின் ஆசை, அந்த ஆசையின் அக்கறையில் அவர் தன் மகனிடம் நடந்து கொள்ளும் கண்டிப்பு” (Sundarapandian, 1992)

இம்மேற்கோள் கல்வியைப் பற்றிய ஒரு குடும்பத்தின் சமூகக் கனவையும் பொருளாதார முன்னேற்றத்திற்கான விருப்பத்தையும் வெளிப்படுத்துகிறது. உடல் உழைப்பைச் சார்ந்த வாழ்க்கையிலிருந்து அறிவுசார் பணியை நோக்கி நகர்வதே அடுத்த தலைமுறைக்கான முன்னேற்றமாகக் கருதப்படுகிறது.

பொருநை நாவலில் ஆறுமுகத்தின் உயர்கல்விப் பயணம் விரிவாகச் சித்தரிக்கப்படுகிறது. தனது ஊரில் பள்ளிப் படிப்பை முடித்த அவன் கல்லூரிக்குச் செல்லும் முதல் மாணவனாகத் திகழ்கிறான். இதனை ஆசிரியர்,

> “அந்த நாள், ஆறுமுகத்துக்குப் பொன்னாள். முதல் முதலாகக் காலேஜுக்குப் போகிறான். அவங்க ஊரிலே அவன்தான் முதல் பி.யூ.சி. ஸ்கூல தாண்டி காலேஜுக்கு போனவன் அவன் மட்டும்தான்” என்று குறிப்பிடுகிறார் (Sundarapandian, 2023a).

இந்த வரிகள் தனிமனிதக் கல்வி முன்னேற்றத்தை மட்டுமல்லாமல், கிராமத்தின் சமூக வரலாற்றில் உருவாகும் புதிய மாற்றத்தையும் வெளிப்படுத்துகின்றன. ஒருவன் கல்லூரிக்குச் செல்வது அவனுடைய தனிப்பட்ட சாதனையாக இருந்தாலும், அதன் பின்னணியில் ஒரு குடும்பத்தின் எதிர்பார்ப்பும் ஒரு கிராமத்தின் சமூக முன்னேற்ற விருப்பமும் அடங்கியுள்ளன.

மேலும், ஆறுமுகம் பொறியியல் படிப்பதற்கான வாய்ப்பு இருந்தும் தமிழிலக்கியத்தைத் தேர்ந்தெடுக்கிறான். இதன் மூலம் கல்வி என்பது வேலைவாய்ப்புக்கான கருவி மட்டுமல்ல; அது மொழி, பண்பாடு, அறிவு ஆகியவற்றின் மீது கொண்ட ஈடுபாட்டையும் வெளிப்படுத்துகிறது.

> “ஆறுமுகம் மீண்டும் பட்ட வகுப்பு படிக்க சேவியர் கல்லூரியில் சேர்ந்தான். தமிழ் இலக்கியம் படிக்கப் போகிறோம் என்பதில் அவனுக்கு ரொம்ப சந்தோசம்” (சுந்தரபாண்டியன், 2023). இவ்வாறு கல்வி ஆறுமுகத்தின் வாழ்க்கையில் இடமாற்றத்தை ஏற்படுத்துவதோடு, அவனுடைய சிந்தனை உலகத்தையும் விரிவுபடுத்துகிறது.

பொருநை: நிலம், நதி, பண்பாட்டு அடையாளம்

பொருநை நாவலில் தாமிரபரணி நதி ஒரு இயற்கைச் சூழலாக மட்டும் இடம்பெறவில்லை. அது ஆறுமுகத்தின் வேருணர்வு, பிராந்திய அடையாளம், பண்பாட்டு நினைவு ஆகியவற்றின் குறியீடாக விளங்குகிறது. கிராமத்திலிருந்து கல்லூரி வாழ்க்கைக்குள் நுழையும் ஆறுமுகத்திற்கு பொருநை நதி புதிய அனுபவத்தையும் பழைய நினைவுகளையும் ஒருங்கே அளிக்கிறது.

நாவலின் பதிப்புரையில் இடம்பெறும் வரிகள் இதனைத் தெளிவுபடுத்துகின்றன:

> “இது ஆறுமுகம் கால்கரையைத் தாண்டி தாமிரபரணி கரையில் தமிழ்படித்த கதை” (Sundarapandian, 2023a). இந்த வரி ஆறுமுகத்தின் வாழ்க்கைப் பயணத்தில் பொருநை நதிக்கரையும் தமிழ்க் கல்வியும் ஒன்றோடொன்று இணைந்திருப்பதை உணர்த்துகிறது. மேலும்,

> “ஓடை நீரில் பிறந்து வளர்ந்த ஒரு மீன் குஞ்சு பொருநை நதியில் எதிர் நீச்சல் அடித்த கதை” (Sundarapandian, 2023a)

என்ற உருவகம், சிறிய கிராமச் சூழலில் வளர்ந்த ஒருவன் விரிந்த அறிவுலகத்தை நோக்கி முன்னேறுவதைக் குறிக்கிறது. இங்கு நதி வாழ்க்கையின் ஓட்டத்தையும் வளர்ச்சியையும் எதிர்ப்புகளைத் தாண்டிச் செல்லும் ஆற்றலையும் குறிக்கிறது.

தாமிரபரணி ஆற்றின் அருகில் ஆறுமுகம் நிற்கும் காட்சியில் அவனுடைய வியப்பும் நெருக்கமும் வெளிப்படுகின்றன:

> "தாமிரபரணி சலசலத்து ஓடிக்கொண்டிருந்தது. அவனுக்குத் தண்ணியத் தொட்டுப் பார்க்கணும் போல இருந்துச்சி. இப்பதான் இந்த ஆத்த இவ்வளவு நெருக்கமா பாக்குறான்" (Sundarapandian, 2023a)

இயற்கையோடு மனிதனுக்கு இருக்கும் உறவை இவ்வரிகள் வெளிப்படுத்துகின்றன. சிறுவயதில் அறிந்திருந்த சிறிய நீர்நிலைகளிலிருந்து விரிந்த நதியைச் சந்திக்கும் அனுபவம், அவனுடைய உலகப் பார்வையில் ஏற்படும் விரிவாக்கத்தையும் குறிக்கிறது.

பொருநை நதியின் வரலாற்றுப் பெருமையையும் பண்பாட்டுச் சிறப்பையும் நாவல் பதிவு செய்கிறது.

> "இது பொதிகையில் பிறந்தது. இதில் அகத்தியரின் தமிழ் தண்ணீராய் பாய்ந்தது. இதனை வால்மீகியாக இருக்கட்டும். வியாசராக இருக்கட்டும், காளிதாசராக இருக்கட்டும் எல்லோரும் இதனைப் பாராட்டிப் பாடியிருக்கிறார்கள். தாமிரபரணி என்பது இன்னொரு பெயர்" (Sundarapandian, 2023a)

இத்தகைய பதிவுகள் நதியை இயற்கை வளமாக மட்டும் பார்க்காமல், மொழி மற்றும் பண்பாட்டு மரபின் அடையாளமாகவும் அணுகுகின்றன. எனவே, பொருநை நாவலில் நிலமும் நதியும் மனிதனின் அடையாளத்தை உருவாக்கும் பண்பாட்டு வெளிகளாக அமைகின்றன.

கூவம்: நகரமயமாக்கமும் சமூக மாற்றமும்

கூவம் நாவல் ஆறுமுகத்தின் வாழ்க்கையில் நிகழும் மற்றொரு முக்கியமான இடப்பெயர்வைக் குறிக்கிறது. கிராமத்திலிருந்து சென்னைக்குச் செல்லும் அவன், புதிய நகரச் சூழலையும் கல்வி வாய்ப்புகளையும் எதிர்கொள்கிறான். இங்கு சென்னை என்பது வேலைவாய்ப்பு மற்றும் கல்விக்கான இடமாக மட்டுமல்லாமல், பல்வேறு பண்பாடுகள், வரலாறுகள், அரசியல் கருத்துகள் சந்திக்கும் பெருநகரமாகவும் சித்தரிக்கப்படுகிறது.

சென்னையின் தோற்றம் மற்றும் பெயர்மாற்றம் குறித்த தகவல்களை ஆறுமுகம் அறிந்துகொள்வது, அவனுடைய நகர அனுபவத்தை வரலாற்றுப் பார்வையுடன் இணைக்கிறது. சென்னை என்பது ஒரே பண்பாட்டைச் சார்ந்த நகரமல்ல; பல்வேறு குடியிருப்புகள், சமூகங்கள், வரலாற்று நிகழ்வுகள் ஆகியவற்றின் கலவையாக அது உருவாகியுள்ளது. இதனை ஆசிரியர்,

> "பல கிராமங்களின் கலவைதான் சென்னை. அதில் இந்தக் கிராமத்தானும் கலக்கப் போகிறான்" (Sundarapandian, 2023b) என்று குறிப்பிடுகிறார்.

இந்த வரி நகரமயமாக்கத்தின் அடிப்படையான இயல்பை வெளிப்படுத்துகிறது. கிராமத்திலிருந்து நகரத்திற்குச் செல்பவன் நகரத்தின் ஒரு பகுதியாக மாறுகிறான். அதே நேரத்தில் தன்னுடைய பழைய அடையாளத்தையும் அனுபவங்களையும் முற்றிலும் இழந்துவிடுவதில்லை. நகரம் அவனுக்குப் புதிய வாய்ப்புகளையும் புதிய சவால்களையும் வழங்குகிறது.

பச்சையப்பன் கல்லூரி ஆறுமுகத்தின் கல்வி வாழ்க்கையில் முக்கிய இடத்தைப் பெறுகிறது. அந்தக் கல்லூரியின் சூழலைக் குறிப்பிடும் போது,

> "பச்சையப்பன் கல்லூரி படிகளில் ஏறினான். பச்சையப்பன் படிக்கட்டும் பைந்தமிழ் பாடும் என்றார்கள். பார்க்கலாம் பாடுகிறதா என்று" (Sundarapandian, 2023b)

என்ற வரிகள் இடம்பெறுகின்றன. இங்கு கல்லூரி என்பது கல்வி கற்கும் இடமாக மட்டுமல்லாமல், தமிழ்மொழி மற்றும் பண்பாட்டு உணர்வு வளர்கின்ற அறிவுசார் வெளியாகவும் அமைகிறது.

ஆனால், நகரத்தின் வளர்ச்சியோடு அதன் இயற்கைச் சூழலும் மாற்றமடைகிறது. கூவம் நதியின் நிலைமாற்றம் இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகிறது. நாவலில்,

> "கூவம் திருவள்ளூர் மாவட்டத்துல தொடங்குது. கடற்கரையில் பல்கலைக் கழகம் அருகே கலக்கிறது. இதன் நீளம் 72 கிலோ மீட்டராம். திருவேற்கோலம் கோயில் அருகே கூவம் என்பது ஒரு கிராமத்தின் பெயர். நல்ல ஆறு. ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலேயே இப்படி கலீஜாகி விட்டது. இன்று கழிவு நீர் வாய்க்கால் போல ஆகிவிட்டது" (Sundarapandian, 2023b)

என்று குறிப்பிடப்படுகிறது.

இந்த மேற்கோள் நகர வளர்ச்சிக்கும் சுற்றுச்சூழல் சீரழிவுக்கும் இடையிலான தொடர்பை வெளிப்படுத்துகிறது. ஒரு காலத்தில் மக்கள் பயன்படுத்திய இயற்கை நீர்நிலை, காலப்போக்கில் மாசடைந்த நிலையில் மாறியிருக்கிறது. இதன் வழியாக நகரமயமாக்கம் என்பது கட்டடங்கள், கல்வி நிறுவனங்கள், சாலைகள் ஆகியவற்றின் வளர்ச்சி மட்டுமல்ல இயற்கை வளங்களின் பயன்பாடு மற்றும் சீரழிவையும் உள்ளடக்கியது என்பதை ஆசிரியர் எடுத்துரைக்கிறார்.

சென்னை நகரத்தில் ஆறுமுகம் எதிர்கொள்ளும் மற்றொரு முக்கிய அனுபவம் மொழியுணர்வும் அரசியல் விழிப்புணர்வும் ஆகும். ஆராரோ நாவலிலேயே அவனுடைய இளமைப் பருவத்தில் இந்தி எதிர்ப்புப் போராட்டம் குறித்த விழிப்புணர்வு உருவாகிறது.

> “இந்தி இருக்குற ஒரு ரூபாய் நோட்டை எரிச்சான் ஒருத்தன். அதுக்குள்ள இன்னொருத்தன் இந்தி பொஸ்தங்களக் கொண்டு வந்து பஜார்ல போட்டு எரிச்சான். எல்லாரும் ‘தமிழ் வாழ்க’ சத்தம் போட்டாங்க” (Sundarapandian, 2003b)

இவ்வரிகள் மொழி என்பது வெறும் தொடர்புக் கருவி அல்ல; அது ஒரு சமூகத்தின் பண்பாட்டு அடையாளம் என்பதையும் வெளிப்படுத்துகின்றன. இத்தகைய அரசியல் அனுபவங்கள் ஆறுமுகத்தின் சமூகப் பார்வையை வளர்க்கின்றன. இதனால் இடப்பெயர்வு என்பது உடல் சார்ந்த நகர்வாக மட்டும் இல்லாமல், அறிவு மற்றும் அரசியல் விழிப்புணர்வின் விரிவாக்கமாகவும் அமைகிறது.

காவேரி: வேலைவாய்ப்பும் இடப்பெயர்வின் சமூகப் பொருளும்

சுந்தரபாண்டியனின் காவேரி நாவல் இடப்பெயர்வை மையமாகக் கொண்டு மனித வாழ்க்கையின் சமூக இயங்கியலை ஆராய்கிறது. கல்வி முடித்த ஆறுமுகம் வேலைவாய்ப்பைத் தேடி பெங்களூருக்குச் செல்கிறான். இதுவரை அவன் கடந்து வந்த கிராமம், கல்லூரி, சென்னை ஆகிய இடங்களைத் தொடர்ந்து புதிய மொழி மற்றும் பண்பாட்டுச் சூழலுக்குள் நுழைகிறான்.

நாவலின் தொடக்கப் பகுதியில் இடப்பெயர்வு குறித்த ஆசிரியரின் பார்வை விரிவாக வெளிப்படுகிறது:

> “சமூக இயங்கியலின் சூத்திரமே இடப்பெயர்ச்சிதான். வேட்டைச்சமூகம் மேய்ச்சல் சமூகமாகி, அதைத் தொடர்ந்து விவசாயச் சமூகமாகவும் தொழில்சார் சமூகமாகவும் கால ஓட்டத்தில் மாற்றமடைவதற்குள் ஏராளமான இடப்பெயர்ச்சிகள் நிகழ்ந்துவிட்டன” (சுந்தரபாண்டியன், 2024).

இந்த மேற்கோள் இடப்பெயர்வை மனிதகுல வரலாற்றின் அடிப்படையான இயக்கமாகக் கருதுகிறது. சமூகத்தின் பொருளாதார அமைப்பு மாறும்போது மனிதர்களின் வாழ்விடங்களும் மாறுகின்றன. வேட்டைச் சமூகத்திலிருந்து விவசாயச் சமூகத்திற்கும், பின்னர் தொழில்சார் சமூகத்திற்கும் நிகழ்ந்த மாற்றங்கள் மனிதர்களின் இடப்பெயர்வுகளோடு தொடர்புடையவை.

மேலும், கல்வி நிறுவனங்கள், தொழிற்சாலைகள், வேலைவாய்ப்புகள், போர்கள், கலவரங்கள், நகரமயமாக்கம் ஆகியவை இடப்பெயர்வுக்கான காரணிகளாக அமைகின்றன. இவ்வகையில் இடப்பெயர்வு என்பது தனிமனித விருப்பத்தின் அடிப்படையில் மட்டும் நிகழ்வதில்லை; சமூக மற்றும் பொருளாதாரத் தேவைகளும் அதனைத் தீர்மானிக்கின்றன.

ஆறுமுகத்தின் வாழ்க்கைப் பயணத்தைப் பற்றிய பதிவு இதனை மேலும் தெளிவுபடுத்துகிறது:

> “குரங்காற்றங்கரையில் பிறந்து வளர்ந்து, பொருநை நதிக்கரையில் கல்லூரிப்படிப்பை முடித்து, கூவம் நதிக்கரையில் பல்கலைக்கழக ஆய்வுகளில் ஈடுபட்டு முனைவர் பட்டம் பெற்ற ஆறுமுகப்பாண்டியன், வேலை வாய்ப்புக்காக காவேரி பிறந்த மாநிலத்தின் தலைநகரமான பெங்களூருக்கு இடம்பெயர்ந்து வருவதிலிருந்து சுந்தரபாண்டியன் தன் நாவலைத் தொடங்குகிறார்” (Sundarapandian, 2024).

இந்தப் பதிவு நான்கு இடங்களையும் ஒரே வாழ்க்கைப் பயணத்தின் வெவ்வேறு நிலைகளாக இணைக்கிறது. குரங்காறு அவனுடைய பிறப்பிடத்தையும் குழந்தைப் பருவத்தையும் குறிக்கிறது. பொருநை கல்வி மற்றும் இளமை வளர்ச்சியைக் குறிக்கிறது. கூவம் உயர்கல்வி மற்றும் ஆய்வுலக அனுபவத்தைக் குறிக்கிறது. காவேரி வேலைவாய்ப்பு, தொழில்முறை வாழ்க்கை மற்றும் புதிய பண்பாட்டுச் சூழலைக் குறிக்கிறது.

இதன் மூலம் நாவல்களின் இடவியல் அமைப்பு ஒரு மனிதனின் வாழ்க்கை வளர்ச்சியோடு இணைக்கப்படுகிறது. ஒவ்வொரு இடமும் அவனுக்கு ஒரு புதிய அனுபவத்தை அளிக்கிறது. அதே நேரத்தில் முந்தைய இடங்களின் நினைவுகளும் அவனுடைய மனதில் தொடர்ந்து செயல்படுகின்றன.

பெங்களூரில் ஆறுமுகம் எதிர்கொள்ளும் அரசியல் நிகழ்வுகள் அவனுடைய வாழ்வில் புதிய நெருக்கடிகளை உருவாக்குகின்றன. கோகாக் அறிக்கைப் போராட்டம், சரோஜினி மகிஷி அறிக்கை, காவிரி நதிநீர்ப் பங்கீட்டுப் போராட்டம், ராஜீவ் காந்தி படுகொலை, ராஜ்குமார் கடத்தல், திருவள்ளுவர் சிலை திறப்பு தொடர்பான போராட்டங்கள் போன்ற நிகழ்வுகள் நாவலில் இடம்பெறுகின்றன. இவை

அனைத்தும் ஆறுமுகத்தின் தனிப்பட்ட வாழ்க்கையைத் தாண்டி, மாநிலங்களுக்கிடையிலான மொழி, பண்பாடு, அரசியல் உறவுகளையும் வெளிப்படுத்துகின்றன.

> "கோகாக் அறிக்கை போராட்டம், சரோஜினி மகிஷி அறிக்கை, காவிரி நதிநீர்ப் பங்கீடு போராட்டம், ராஜீவ் காந்தி படுகொலை, வீரப்பனின் பிடியில் கன்னட நட்சத்திர நடிகரான ராஜ்குமார் கண்ணுக்குத் தெரியாத இடத்தில் 108 நாட்கள் அடைபட்டிருந்த சோகம், காவிரி நதிநீர்ப்பங்கீடு தீர்ப்பு தொடர்பான போராட்டங்கள், திருவள்ளுவர் சிலைத்திறப்பு போராட்டம் என சீரான இடைவெளிகளில் நிகழ்ந்த பல அரசியல் நடவடிக்கைகளையும் சுந்தரபாண்டியன் தன் நாவலில் சித்தரித்திருக்கிறார்" (Sundarapandian, 2024)

இம்மேற்கோள் இடப்பெயர்வு நிகழும் சூழலில் மனிதன் எதிர்கொள்ளும் அரசியல் மற்றும் பண்பாட்டுச் சிக்கல்களை எடுத்துரைக்கிறது. வேறொரு மாநிலத்தில் வாழும் மனிதன் அங்கு நிலவும் மொழி, இன, பண்பாட்டு அரசியலிலிருந்து முற்றிலும் விலகி இருக்க முடியாது. அவனுடைய அன்றாட வாழ்க்கையும் சமூக உறவுகளும் அரசியல் நிகழ்வுகளால் பாதிக்கப்படுகின்றன.

இதனால் காவேரி நாவலில் இடப்பெயர்வு என்பது வேலைவாய்ப்புக்காக மேற்கொள்ளப்படும் நகர்வு என்ற அளவைக் கடந்து, மொழி, பண்பாடு, அரசியல் மற்றும் அடையாளம் சார்ந்த சிக்கல்களை உள்ளடக்கியதாக அமைகிறது.

இடமும் நினைவும்: நாவல்களின் தொடர்ச்சியான வாழ்வியல் அமைப்பு

சுந்தரபாண்டியனின் நாவல்களைத் தொடர்ந்து வாசிக்கும்போது, இடங்களுக்கும் நினைவுகளுக்கும் இடையே நெருங்கிய தொடர்பு இருப்பது புலப்படுகிறது. ஆறுமுகம் ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குச் சென்றாலும், அவன் முன்பு வாழ்ந்த இடங்கள் அவனுடைய நினைவிலிருந்து மறைவதில்லை. புதிய இடத்தில் வாழும்போது பழைய இடங்களின் அனுபவங்கள் அவனுடைய சிந்தனையில் மீண்டும் தோன்றுகின்றன.

பொருநை நாவலில் சுலோச்சனா முதலியார் பாலத்தைக் கடக்கும்போது தாமிரபரணி நதியைப் பார்க்கும் ஆறுமுகத்திற்குத் தந்தையுடன் குளித்த நினைவு வருகிறது.

> "சுலோச்சனா முதலியார் பாலத்தைக் கடக்கும்போது பொருநை நதியைப் பார்த்தான். இறங்கி கால் நனைக்க ஆசைதான். அப்பாவோடு சேந்து குளித்தது நினைவுக்கு வந்தது" (Sundarapandian, 2023a)

இந்தக் காட்சி இடம் எவ்வாறு நினைவுகளைத் தூண்டுகிறது என்பதற்குச் சான்றாக அமைகிறது. நிகழ்காலத்தில் காணப்படும் நதி, கடந்தகாலக் குடும்ப அனுபவங்களை மீட்டெடுக்கிறது. எனவே, நதி என்பது இயற்கைச் சூழல் மட்டுமல்ல; குடும்ப உறவுகளையும் குழந்தைப் பருவத்தையும் நினைவூட்டும் மனவெளியாகவும் அமைகிறது.

அதேபோன்று, கூவம் நாவலில் சென்னையை விட்டு பெங்களூருக்குச் செல்ல வேண்டிய சூழல் உருவாகும்போது ஆறுமுகம் மனத்தளவில் தயக்கமடைகிறான். சென்னையோடு அவனுக்கு உருவான நெருக்கம் அவனைப் பிரிவின் வலிக்கு உள்ளாக்குகிறது. அப்போது,

> "'சென்னையை விட்டு போக மனமில்லை'" என்று ஆறுமுகம் கூறியபோது, "'கூவத்தை விட்டு விட உனக்கு மனமில்லையா? காவேரி தண்ணீர் உனக்காகக் காத்திருக்கிறது. போய் வா'" என்று பதிலளிக்கப்படுகிறது (Sundarapandian, 2023b)

இந்த உரையாடல் இடங்களுக்கிடையிலான மாற்றத்தை மட்டுமல்லாமல், அவற்றோடு மனிதன் உருவாக்கிக்கொள்ளும் உணர்வுப் பிணைப்பையும் வெளிப்படுத்துகிறது. சென்னையில் அவன் பெற்ற கல்வி, நட்பு, அனுபவம், அறிவு ஆகியவை அவனுடைய வாழ்க்கையின் ஓர் அங்கமாக மாறியுள்ளன. எனவே, அந்நகரத்தை விட்டு வெளியேறுவது புவியியல் மாற்றமாக மட்டுமல்லாமல், உணர்வுபூர்வமான பிரிவாகவும் அமைகிறது.

மேலும், நான்கு நாவல்களின் வாழ்க்கைத் தொடர்ச்சியைப் பற்றிய பதிவு அவற்றின் ஒருங்கிணைந்த அமைப்பை வெளிப்படுத்துகிறது:

> "'ஆராரோ'வில் (அனுமன் நதி என்னும் குரங்காறு), ஆறுமுகத்தின் பள்ளிக்கூட வாழ்க்கையும், 'பொருநை'யில் ஆறுமுகத்தின் கல்லூரி வாழ்க்கையும், 'கூவத்தில்' ஆறுமுகத்தின் பல்கலைக்கழக வாழ்க்கையும் கதைகளாக விரிந்தது போலவே 'காவேரி'யில், ஆறுமுகம் தமிழ்ப் பேராசிரியராக, தமிழ் எழுத்தாளராக, தமிழ்ப் பதிப்பாளராக, தமிழ்ப் பத்திரிகையாளராகப் பரிமாணம் பெற்றமை கதையாக விரிந்துள்ளது" (Sundarapandian, 2024).

இம்மேற்கோள் நான்கு நாவல்களும் ஆறுமுகத்தின் வாழ்க்கைப் பயணத்தின் வெவ்வேறு பருவங்களை எடுத்துரைப்பதை உறுதிப்படுத்துகிறது. இதன் வழியாக நாவல்களின் தலைப்புகளே வாழ்க்கை அனுபவங்களோடு தொடர்புடைய இடங்களைக் குறிக்கும் குறியீடுகளாக அமைகின்றன.

முடிவுரை

சுந்தரபாண்டியனின் ஆராரோ, பொருநை, கூவம், காவேரி ஆகிய நாவல்கள் மனித வாழ்க்கையின் பல்வேறு நிலைகளையும் அவற்றோடு தொடர்புடைய இடப்பெயர்வுகளையும் சமூக மாற்றங்களையும் ஒருங்கிணைத்துப் பதிவு செய்கின்றன. ஆராரோ கிராமப்புற வாழ்க்கை, குடும்ப உறவுகள், குழந்தைப் பருவ நினைவுகள், சாதிய ஏற்றத்தாழ்வுகள் ஆகியவற்றை மையப்படுத்துகிறது. பொருநை கல்வி வளர்ச்சி, மொழியுணர்வு, பிராந்திய அடையாளம், இயற்கையுடனான உறவு ஆகியவற்றை வெளிப்படுத்துகிறது. கூவம் நகரமயமாக்கம், கல்விச் சூழல், நகரத்தின் வரலாறு, சுற்றுச்சூழல் சீரழிவு மற்றும் அரசியல் விழிப்புணர்வு ஆகியவற்றைப் பதிவு செய்கிறது. காவேரி வேலைவாய்ப்பின் காரணமாக நிகழும் இடப்பெயர்வு, மொழி மற்றும் பண்பாட்டு வேறுபாடுகள், மாநில அரசியல், தனிமனித உளவியல் ஆகியவற்றை எடுத்துரைக்கிறது. இந்நாவல்களில் இடம்பெறும் குரங்காறு, பொருநை, கூவம், காவேரி ஆகியவை வெறும் நதிகளின் பெயர்களாக மட்டும் அமையவில்லை. அவை ஆறுமுகத்தின் வாழ்க்கைப் பயணத்தின் வெவ்வேறு கட்டங்களையும் அவனுடைய அனுபவ உலகத்தையும் குறிக்கின்றன. ஒவ்வொரு இடமும் அவனுடைய வாழ்வில் ஒரு புதிய அனுபவத்தை உருவாக்குவதோடு, முந்தைய இடங்களின் நினைவுகளையும் தொடர்ந்து தன்னகத்தே கொண்டிருக்கிறது. எனவே, சுந்தரபாண்டியனின் நாவல்களில் இடப்பெயர்வு என்பது ஒரு மனிதன் ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குச் செல்வது என்ற குறுகிய பொருளில் அமையவில்லை. அது கல்வி, வேலைவாய்ப்பு, சமூக முன்னேற்றம், மொழியுணர்வு, பண்பாட்டு அடையாளம், அரசியல் விழிப்புணர்வு ஆகியவற்றின் வழியாக நிகழும் வாழ்வியல் மாற்றமாக விரிவடைகிறது. தனிமனித வாழ்க்கையின் வழியாக ஒரு சமூகத்தின் வரலாற்றையும் பண்பாட்டு மாற்றங்களையும் பதிவு செய்வதே இந்நாவல்களின் குறிப்பிடத்தக்க இலக்கியச் சிறப்பாகும்.

References

Sundarapandian (1992) Aaraaro, Kaavya Pathippagam, Chennai, India

Sundarapandian (2023a) Porunai, Kaavya Pathippagam, Chennai, India

Sundarapandian (2023b) Cooum, Kaavya Pathippagam, Chennai, India

Sundarapandian (2024) Kaveri, Kaavya Pathippagam, Chennai, India

Conflict of interest

The Author's has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

About the License

© The Author(s) 2026. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License

Cite this Article

K. Kowsalyadevi, M. Prakash, Migration and Transformations in Ways of Life in Sundarapandian's Novels, Indian Journal of Tamil, 7(4), (2026) 1-7. https://doi.org/10.54392/ijot2641